**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**S.T.C.No. 634/2025**

Deposition of Complainant

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Defence | : |
| Father Name | : ராஜகோபால் | Court | : |
| Village | : பரசலூர், செம்பனார்கோவில் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 53/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 18.09.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

முதல் விசாரணை:-

நான் இந்த வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்றாக தெரியும். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

கடந்த 25.02.2025 தேதியிட்ட ரூ.60,000/-த்திற்கான கனரா வங்கி, மேலையூர் கிளையின் 732251 என்ற எண் கொண்ட காசோலையின் அசல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. செம்பனார்கோவில் இந்தியன் வங்கியால் Funds Insufficient என்ற காரணத்துடன் 04.03.2025 அன்று திருப்பப்பட்ட திருப்புதல் குறிப்பாணையின் அசல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.09.2025 அன்று செம்பனார்கோவில் இந்தியன் வங்கியிலிருந்து அதன் கிளை மேலாளர் கொடுத்த கடிதம் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 12.03.2025 அன்று புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான Track Consignment **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.